Bildungsdirektion Kanton Zürich
Volksschulamt

# பெற்றோர்களுக்கான தகவல்கள் - ஒன்றுசேர்த்து ஊக்குவிப்பது

அன்பான பெற்றோர்களே
**மாணவிகளும் அதோடு மாணவர்களும் வித்தியாசமானவாகள். ஆர்வங்களும் அதோடு முன்னேற்ற நிலையும், தகுதிகளும் அதோடு தேவைகளும், திறமைகளும் அதோடு விருப்பங்களும், படிப்பதில் சிறிதளவு அல்லது பெரிய பிரச்சனைகள் போன்றவையும் ஒவ்வொரு பிள்ளைக்கும் வித்தியாசப்படும். வழக்கமான வகுப்பாசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையும் சரியாக இருப்பதற்கு எவ்வளவு ஏலுமோ அதோடு அதற்கு இயலுமான விஷயங்களை தகுந்த முறையில் ஊக்குவிப்பதற்கும் முயற்சி செய்வார்கள். அதிலே அவர்களுக்கு பாடசாலைக்கான ஒன்றை (ஒரு பிரச்சனையை) சரியாக்குவதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் ஒன்றுசேர்த்து ஊக்குவிப்பது சம்மந்தமாக உதவிசெய்வார்கள்.**

## எவை விஷேஷ கற்பிக்கும் முறைக்கான தேவைகள்?

**பிள்ளைகள் அல்லது இளவயதினருக்கு அவர்களினுடைய வகுப்பு மட்டத்திற்கு ஏற்ற குறிக்கோளை விஷேஷ முயற்சியுடன் ஆக கொஞ்சம் அல்லது அறவே அடைய முடியாவிட்டால் ஒரு „விஷேஷ கற்பிக்கும் முறைக்கான தேவையைப்“ பற்றி பேசுவார்கள். நல்ல திறமையுடைய மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும், அவர்களுக்கு பாடங்கள் குறைவாக அல்லது இலகுவாக இருந்து அவை நன்றாகத் தெரிந்திருந்தால், அவர்களுக்கும் ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவைப்படும். இந்தத் தேவைகள் கொஞ்ச காலத்திற்கு இருக்கலாம் அல்லது கன காலத்திற்கும் நீடிக்கலாம். பாடசாலையின் எதிர்பார்ப்புக்களும் அதோடு ஒரு மாணவி அல்லது ஒரு மாணவனின் நிலையும் ஒத்துவராவிடில் ஒன்றுசேர்த்து ஊக்குவிப்பது சம்மந்தமாக குறிப்பிட்ட ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் தேவைப்படும்.**

## பாடசாலை என்ன செய்யலாம்?

**வழக்கமான வகுப்பில் படிப்பிக்கும் போது வகுப்பாசிரியர்களும் அதோடு பாடசாலைக்கான ஒன்றை சரியாக்குவதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் (விஷேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்) சேர்ந்து வேலை செய்வது மிக முக்கியம். சேர்ந்து விஷேஷ கற்பிக்கும் முறைக்கான தேவைகளை எவ்வளவு சீக்கிரமாக இயலுமோ கண்டுபிடிக்க வேண்டும்.**

**விஷேஷ கற்பிக்கும் முறை தேவை என்பதை அவதானித்து அல்லது ஊகித்து வகுப்பாசிரியர் பெற்றோரை, அனேகமாக ஒரு பாடசாலைக்கான ஒன்றை**

**சரியாக்குவதில் தேர்ச்சி பெற்ற ஆசியரை அல்லது பயிற்சி அளிப்பவரை அதோடு வயதைப்பொறுத்து மாணவி அல்லது மாணவனை ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தைக்கு அழைப்பார். அங்கே தேவைகளையும் அதோடு குறிக்கோளையும் அதோடு இனி என்ன செய்யலாம் என்பதையும் கதைத்து அதோடு எழுதி வைப்பார்கள். வேறு பரிசோதித்து தொளிவுபடுத்த வேண்டியிருந்தால் அல்லது அவர்களுக்கு இடையே இணக்கம் காணப்படாவிடில் பாடசாலைக்கான மனோதத்துவ நிபுணர் வரவழைக்கப்படுவார்.**

**தனிப்பட்ட குறிக்கோள்கள் வகுப்பிலுள்ள குறிக்கோள்களைவிட நிறைய மாறுபட்டு இருந்தால் - அதிகமாக பாடசாலை மனோதத்துவ நிபுணர் பரிசோதித்து தெளிவுபடுத்தியதன் பின்பு - பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையின் போது தனிப்பட்ட முறையில் படிப்பதற்கான குறிக்கோளுக்கு ஏற்பாடு செய்வார்கள். அப்போ அறிக்கையில் (ரிப்போட்) ஒன்று அல்லது பல பாடங்களுக்கு மதிப்பெண்கள் போடாமல் விடலாம் அதோடு அதற்குப் பதிலாக ஒரு  படிப்பைப்பற்றிய அறிக்கை தயாரிக்கலாம்.**

**ஆகக் கூடியது ஒரு வருடத்திற்குள் இன்னொரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையில் இந்த முயற்சிகள் தேவையா என்பது சரிபார்க்கப்படும்.**

**ஒன்றுசேர்த்து ஊக்குவிப்பது என்றால் என்ன?**

**விஷேஷ பயிற்சி பெற்ற ஊக்குவிப்பதற்கான ஆசிரியர் அதிகமாக கின்டர் காடனையும் அதோடு ஆரம்ப வகுப்புக்களையும் ஒழுங்காக அல்லது சிலவேளைகளில் பாடம் நடக்கும் போது பார்வையிடுவார். அவவினுடைய ஒத்துழைப்பால் எல்லா மாணவிகளும் அதோடு மாணவர்களும் நன்மையடைவதோடு பாடசாலையும் முழுமையாகப் பலமடையும். இப்படி வகுப்பாசிரியரும் அதோடு விஷேஷ பயிற்சி பெற்ற ஆசிரியரும் மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் எல்லா மட்டங்களிலும் அதோடு வகுப்புக்களிலும் அவர்களினுடைய படிப்புப் பாதைக்கு வழி காட்டுவார்கள்.**

**ஒன்றுசேர்த்து ஊக்குவிக்கும் முறை பாடசாலைக்கு அல்லது ஒவ்வொரு மாணவிக்கும் அதோடு ஒவ்வொரு மாணவனுக்கும் முக்கியமாக கீழ்வரும் விஷயங்களில் உதவிசெய்யும்:**

- **பொதுவான படிப்பு (உதாரணமாக அவதானம், ஞாபகசக்தி, படிக்கும்- அதோடு பிரச்சனைகளைத் தீர்க்கும் தந்திரம்)**
- **எழுதுவதும் அதோடு வாசிப்பதும் (பாஷையைப் பழகுவதும் அதோடு வார்த்தைகளைச் சொல்வதும், வாசிப்பதிலும் எழுதுவதிலும் உள்ள பிரச்சனைகள்)**
- **கணிதம் படித்தல் (கணக்கு செய்வதில் கஷ்டம்)**
- **செய்யவேண்டியவற்றை சமாளிப்பது (உதாரணமாக ஊக்கப்படுத்தவது,**

வேலைகளை இணைப்பது, சொந்தப் பழக்க வழக்கங்களில் கட்டுப்பாடாக இருப்பது, சந்தோஷத்தையும் ஏமாற்றத்தையும் சமாளிப்பது)
- மிகவும் திறமைவாய்ந்த பிள்ளைகளுக்கும் அதோடு இளவயதினருக்கும், அவர்களுக்கு பாடங்கள் குறைவாக அல்லது இலகுவாக இருந்து அவை நன்றாகத் தெரிந்திருந்தால்
- மற்ற ஆட்களுடன் நடந்து கொள்ளும் முறை (மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதற்கும்- அதோடு நன்நடத்தைக்குமான திறமை, ஆட்களை நெருக்கமாகவும் மேலும் தூரத்திலும் ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்வதற்கு)

இந்த ஊக்குவிக்கும் முறை பிள்ளைகளினதும் அதோடு இளவயதினரினதும் திறமையைக் கூட்டும். அது அவர்களினுடைய தேவைகளுக்காக உருவாக்கப்பட்டது அதோடு அது அவர்களுக்கு பாடசாலை அலுவல்களிலும் மேலும் மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதையும் முன்னேற்றுவதற்கு உதவி செய்யும். இந்தக் கற்பிக்கும் முறை வகுப்பிற்கு உள்ளே அல்லது வெளியே, தனிய அல்லது கூட்டாக நடைபெறும்.

அதோடு ஆசிரியர்களுக்கும் அவர்களினுடைய ஊக்குவிக்கும்- அதோடு ஒன்றுசேர்க்கும் வேலைகளில் விஷேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் உதவி கிடைக்கும். இந்த உதவி உதாரணமாக சேர்ந்து திட்டமிடும் போதும் அதோடு கற்பிக்கும் போதும் (குழுவாக சேர்த்து கற்பிப்பது), மாணவிகளும் அதோடு மாணவர்களும் படிக்கும் முறையை அவதானிப்பதன் மூலம், சரியான படிக்கும் சாதனங்களை கொடுப்பதற்கும் அதோடு பொருத்தமான படிப்பிக்கும் முறையை தேர்ந்தெடுப்பதற்கும் கிடைக்கும். இந்த விஷேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் ஊக்குவிப்பதற்கு திட்டமிடுவார்கள் அதோடு வகுப்பாசிரியருடன் கதைத்து படிப்பைப்பற்றிய அறிக்கையை எழுதுவார்கள்.

சில மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட பயிற்சிக்கு உதவி தேவை (பெற்றோர்களுக்கான தகவல்கள் ‹‹பேசுவதற்குப் பயிற்சி›› அதோடு ‹‹அசைவுகளுக்கான பயிற்சி›› ஐப் பார்க்கவும்) அல்லது டொச் இரண்டாவது பாஷையாக உள்ளவர்களுக்கு பாஷை பழகுவதற்கு உதவி (பெற்றோர்களுக்கான தகவல்கள் ‹‹டொச் இரண்டாவது பாஷையாக உள்ளவர்களுக்கு›› ஐப் பார்க்கவும்). வெவ்வேறு நகரசபைகள் அதோடு மேலதிகமாக ஆகத் திறமைவாய்ந்த பிள்ளைகளுக்கு (பெற்றோர்களுக்கான தகவல்கள் ‹‹திறமையுள்ளவர்களை ஊக்குவிப்பது›› ஐப் பார்க்கவும்), பாடசாலையில் கொடுத்துவிடும் வீட்டுப் பாடத்திற்கு உதவுவது அதோடு பகலில் பிள்ளைகளைக் கவனித்துப் பார்த்துக் கொள்வது போன்ற சலுகைகளை அளிக்கின்றன.

## பெற்றோர்கள் என்ன செய்யலாம்?

**பிள்ளைகள் அல்லது இளவயதினரின் படிக்கும் முறையை பாதிக்கின்ற பிரச்சனைகளை பெற்றோரும் அதோடு ஆசிரியர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால்த்தான் தீர்க்கலாம். அதற்காக நீங்கள் அக்கறையுடனும் அதோடு ஊக்கமாகவும் உங்களுடைய பிள்ளையின் பாடசாலை அலுவல்களில் பங்கு பற்றவும் மேலும் உங்களுக்கு கேள்விகள் இருந்தால் வகுப்பாசிரியருடன் கதைப்பதற்கு தயங்க வேண்டாம்.**

**நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவை என்று யோசித்தால் அல்லது கண்டுபிடித்தால், நீங்கள் வகுப்பாசிரியரிடம் ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தை செய்வதற்கு கேட்கவும். இந்தப் பேச்சுவார்த்தையில் பெற்றோர்கள் எப்படி அவர்களினுடைய பிள்ளைக்கு உதவலாமென்பதும் ஏற்பாடு செய்யப்படும். வீட்டில் ஒவ்வொரு நாள் காரியங்களின் போதும் அல்லது பாடசாலையில் கொடுத்துவிடும் வீட்டுப் பாடங்களைச் செய்யும் போதும் பல பிரச்சனைகள் ஏற்படலாம். பெற்றோர்கள் அந்தப் பாடசாலையுடன் சேர்ந்து செய்த உதவி செய்யும் நடவடிக்கைகளை ஒருவருக்கொருவர் சரியாகக் கடைப்பிடிப்பது முக்கியம்.**

**இப்போ மாநிலத்திற்கான பெற்றோர்களுக்கான சங்கங்கள் அதோடு நகராட்சிசபையிலுள்ள பெற்றோர்களுக்கான சபை போன்றவை இருக்கின்றன. இங்கே தகவல்களை கொடுக்கவும், அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளவும் அதோடு பாடசலையில், வீட்டில் அல்லது வேலையைத் தெரிவு செய்வதில் விஷேஷ ஆசிரியர்களின் உதவி தேவைப்படுகின்ற பிள்ளைகளுக்கும் அதோடு இளவயதினருக்கும் தீர்வுக்கான வழியைக் கண்டுபிடிக்கவும் முடியும்.**

**பெற்றோர்கள் அதோடு பொருத்தமான இடங்களில் (உதாரணமாக பாடசாலைக்கான மனோதத்துவ ஆலோசனைக்கான சேவை, இளவயதினருக்கான செயலாளரின் காரியாலயம்) ஆலோசனையும் அதோடு உதவியும் கேட்கலாம்.**

**<u>தகவல்கள் / ஆலோசனை</u>**
**பாடசாலைக்கான மனோதத்துவ ஆலோசனைக்கான சேவை (விலாசங்கள் இதன் கீழே www.vsa.zh.ch→ தேக ஆரோக்கியம் & ஒரு பிரச்சனையை வரமுன் தடுப்பது → பாடசாலைக்கான மனோ தத்துவ சாஸ்திரம்)**

**இளவயதினருக்கான காரியாலயத்தில் உள்ள இளவயதினருக்கும்- அதோடு குடும்பங்களுக்கும் ஆலோசனைகள் (விலாசங்கள் இதன் கீழே www.ajb.zh.ch/JS)**

**‹‹பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தை›› ஐப் பற்றிய தகவல்கள் இதன் கீழே www.vsa.zh.ch→ பாடசாலையின் செயல்ப்பாடுகளும்**

**கற்பித்தலும்→ விஷேஷ கற்பிக்கும் முறை→ பிரிக்கும் முறை→ பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தைகள்**

**பெற்றோர்களுக்கான சங்கங்கள்:**

- **சூரிச் மாநிலத்திலுள்ள பெற்றோர்களின் செயல்ப்பாடுகளுக்கான சங்கம்: www.vez.ch**
- **www.schule-elternhaus.ch**
- **www.verband-dyslexie.ch**